www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

Ts10T

[illegible] மாவட்டப் பொதுத் தேர்வுகள்

முதலாம் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2023

20-01-2023.

-----

**வகுப்பு 10**

**தமிழ்**

நேரம்: 3 மணி | மதிப்பெண்கள்: 100

குறிப்பு: i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**பகுதி - I (மதிப்பெண்கள் 15)**

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக: 15×1=15**

1) 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள்.
இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்.

2) மெத்த வணிகன் - என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது.
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெருங் கலன்களும்
இ) ஐம்பெருங் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

3) 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலனையும் பெயரும் முறையே
அ) பாடிய : கேட்டவர் ஆ) பாடல் : பாடிய இ) கேட்டவர் : பாடிய ஈ) பாடல் : கேட்டவர்

4) 'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

5) 'பெரியமீசை' சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத் தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

6) 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

7) அருந்துணை - என்பதைப் பிரித்தால்
அ) அருமை + துணை ஆ) அரு + துணை
இ) அருமை + இணை ஈ) அரு + இணை

8) கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ளம் இல்லாதவர்கள் இல்லாததால்
ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
ஈ) அங்கு வறுமை இல்லாததால்

9) 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் முறையே
அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

10) 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது ..........
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

11) சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

'தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்க
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ'

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



12) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
அ) முல்லைப்பாட்டு ஆ) கம்பராமாயணம் இ) மலைபடுகடாம் ஈ) சிலப்பதிகாரம்

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) பெருஞ்சித்திரனார் ஆ) நப்பூதனார் இ) இளங்கோவடிகள் ஈ) கம்பர்

14) பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள் யாவை?
அ) தண்டலை, கொண்டல்கள் ஆ) தண்டலை, தாமரை
இ) தெண்டிரை, தேம்பிழி ஈ) கொண்டல்கள், குவளை

15) 'கொண்டல்' - இச்சொல்லின் பொருள் -
அ) காற்று ஆ) மேகம் இ) மலர் ஈ) காடு

## பகுதி - II (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**
**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 4 × 2 = 8**

16) விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க
அ) ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனின் பெயர் பெப்பர்.
ஆ) 1906-ஆம் ஆண்டு வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

17) உலகக் காற்று விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

18) வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

19) வசன கவிதை - குறிப்பு வரைக.

20) பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

21) 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5 × 2 = 10**

22) 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?

23) வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதி ஆனது எவ்வாறு?

24) இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) சிறு - சீறு ஆ) விதி - வீதி

25) அகராதியில் காண்க: அ) ஆர்கலி ஆ) உழுவை

26) குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்ககாட்டு தருக.

27) எண்ணுப்பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.
அ) எறும்புந்தன் கையால் எண் சாண்.
ஆ) பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் நீவிர் பெற விரும்பும் மதிப்பெண்.

28) 'வருக' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க. 2 × 3 = 6**

29) சோலைக் காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

30) சங்க இலக்கியம் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

31) உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாகக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும ஊடகங்களாகவும் திகழுகின்றன. மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



அ) பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன?

ஆ) நிகழ்கலைகளின் பயன்கள் இரண்டினைக் கூறுக.

இ) நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன.

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.**
**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 2 × 3 = 6

32) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக?

33) மன்னர் இடைக்காடனார் என்ற புலவருக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.

34) அடிபிறழாமல் எழுதுக.

'வெய்யோனொளி' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

'தூசும் துகிரும்' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** 2 × 3 = 6

35) 'கண்ணே கண்ணுறங்கு
காலையில் நீயெழும்பு
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு
பாடினேன் தாலாட்டு
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு' இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36) உவமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37) அலகிட்டு வாய்பாடு தருக.

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

## பகுதி - IV (மதிப்பெண்கள் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5 × 5 = 25

38) அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. (அல்லது)

ஆ) பாடப்புத்தகத்தில் இடம்பெற்றுள் மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

39) அ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' எனும் உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்து உள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யுமாறு மின்வாரிய அலுவலருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41) வீட்டு எண் 54, கம்பர் தெரு, தென்காசி மாவட்டத்தில் வசித்து வரும் தமிழன்பனின் மகன் வெற்றிமாறனுக்காக, கொடுக்கப்பட்டுள்ள பணிவாய்ப்புக்கான தன்விவரப் படிவத்தை நிரப்புக.

42) அ) வானொலி அறிவிப்பைக் கேட்ட நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu





1. புயலின்போது வெளியே செல்ல மாட்டேன்
2.
3.
4.
5.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

**Malar :** Devi, switch off the lights when you leave the room.

**Devi :** Yeah, We have to save electricity.

**Malar :** Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.

**Devi :** Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

**Malar :** I have read some other countries are going to launch these types of illumination satellites near future.

**Devi :** Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power!.

ரியக்கோர் .மு, ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப, வல்லம் - 627809.

**பகுதி - V (மதிப்பெண்கள் 24)**

**3 × 8 = 24**

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

43) அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்யும் விருந்தோம்பல் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) நெகிழிப்பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

44) அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' : என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) மங்கையராய்ப் பிறப்பதற்கே என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள பெண் சாதனையாளர்கள் பற்றி எழுதுக.

45) அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை - விண்வெளியில் தமிழரின் அறிவு - கல்பனா சாவலா - விண்ணணியல் அறிவியல் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை - முடிவுரை.

(அல்லது)

ஆ) முன்னுரை - விசும்பின் துளி - விண்ணின் மழைத்துளி - வான் சிறப்பு - வள்ளுவன் வாய்மொழி - மரம் வளர்போம் - பசும்புல் நுனி - இயற்கையைப் போற்றுவோம் - முடிவுரை.

- - - -

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com